556

விலை 0—1—3 "UDAYAM" Weekly. Reg. No. 556




வார வெளியீடு. ஆசிரியர் :— M. கந்தசாமி

| மலர் 1 | திருவத்திபுரம் 17—11—46 விய௵ கார்த்திகைமீ 2உ ஞாயிறு | இதழ் 16 |
|---|---|---|

# சிந்தித்துப்பார்

(முருகு)

இப்போது நாட்டிலே நடப்பது குடி மக்கள் ஆட்சி என்று கூறுகின்றனர். இந்தத் தேசிய ஆட்சி நிலவிய பின்னர் நமது மாகாணத்திலே பல சட்டங்கள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டன; பல திட்டங்கள் செய்யப்பட்டன மந்திரியார்களின் கற்பனைக்கேற்ப. அவர்களால் இப்போது ஒரு புதிய திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. காந்திமகான் வாரதாவிலே பெற்று, வளர்ப்பதற்காகச் சென்னை மாகாண பிரதம மந்திரியார் கனம் பிரகாசம் அவர்களிடத்தில் கொடுக்கப்பட்ட மில் (ஆலைத் தொழிற்சாலைத் திட்டம்) ஒழிப்புத் திட்டம். இத்திட்டத்தால் இனி புதிய மில்கள் (மில் என்று குறிக்கப்படுவன பஞ்சு, நெசவு ஆலைத் தொழிற்சாலைகள்.) ஏற்படுத்தப்படமாட்டா; இருக்கும் மில்களிலும் தேய்ந்துபோன பாகங்களுக்குப் பதிலாக புதிய பாகங்களைப் போடக்கூடாது. அதாவது இப்போது சென்னை மாகாணத்திலேயுள்ள எல்லா மில்களும் அவைகளிலுள்ள இயந்திரங்கள் தேய்ந்து போகும் வரைக்கும் வேலைசெய்யும். பின்னர் எல்லாம் மறைந்துபோம். இவைகளில் உற்பத்தியாகும் துணி, நூல் முதலியன வற்றிற்குப்பதிலாகக் கதர் உற்பத்திச் செய்தல் வேண்டும்.

இத்திட்டத்தைப் பற்றி நாள்தோறும் செய்தித்தாள்களிலே விரிவாகப் பல அறிஞர் கட்டுரை எழுதுவதால் அதைப்பற்றி விவரித்துக் கூறாமல் சுருக்கி ஒரு சில கூறுவோம்.

இப்போது நடப்பது மக்கள் ஆட்சி என்பதை மட்டும் மறக்கக்கூடாது. ஆகையால் இத்திட்டத்திற்கு மக்கள் ஆதரவு இருக்கின்றதா என்பதை முன்னர் கவனித்தில் வேண்டும். ஆதாவு எவ்வளவு தூரம் இருக்கின்றது என்பது நமக்குத் தெரிந்ததே, இருந்தும் கனம் பிரதம மந்திரியார் கவலைகொள்ளவில்லை. தேசியத் தாள்கள் எதிர்க்கின்றன; தேசியத் தலைவர்கள் தடுக்கின்றனர்; ஆங்காங்கே கூட்டம் கூடித் திட்டத்தைக் கண்டிக்கின்றனர். முழுவிவரங்கள் காட்டி விளக்குகின்றனர். ஆனால்......

கனம் பிரதம மந்திரியாரின் திட்டத்தால் பல இன்னல்கள் உண்டு. அவைகளில் ஒன்று தனித்த மனிதனுடைய சுதந்திரம் பறிக்கப்படுகின்றது. எல்லோருக்கும் கதர் மீது விருப்பம் இருக்க முடியாது. கதர் திட்டத்திற்குத் தகப்பனாக இருக்கும் காந்திக்கும் அவர் மகனுக்குமே வித்தியாசம் இருக்கும்போது நாட்டு மக்கள் எப்படியிருப்பர் என்பது தெரியவில்லையா? இத்திட்டத்தால் மறைமுகமாக எல்லோரையும் கதர் அணியுங்கள் என்று கூறுவது நீதியா? சுய ஆட்சியின் தன்மை இதுதானோ!

இனி எங்ஙனம் நாட்டின் பொருளாதார நிலை கெடுகின்றது என்பதைப் பார்ப்போம். இப்போது உலகத்திலுள்ள நாடுகள் எல்லாம் முன்னேற்றமடைந்து வருகின்றன; புதிய புதிய தொழிற்சாலைகளை உண்டாக்குகின்றன, விஞ்ஞானத்தின் துணையினால். மனித சமூகத்திற்குப் பெருத்த துன்பத்தை விளைவிக்காமல் எளிய முறையிலே சொற்பச் செலவில் பல பொருள் செய்து நிறைய லாபத்திற்கு விற்று நாட்டின் பொருளாதார நிலையை யுயர்த்தி, மக்களுக்கு வேண்டுவன எல்லாம் செய்து கொடுத்து மக்களின் வாழ்க்கை நிலையை யுயர்த்துகின்றனர்.

அங்ஙனமே நமது நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காகப் பெரும்போர் மூண்டு கிடந்த காலத்திலே, எதிர்காலத் திட்டத்தை வகுக்கப் பல குழுக்கள் அமைக்கப்பட்டன. அக்குழுக்கள் பலவற்றுள் ஒன்றிற்குத் தலைவராக இன்று தேசியத் தலைவராக இருக்கும் நேருவும் அமர்ந்தார். (National planning Committee; planning Sub-Committee of the Textile Control Board) போன்ற பல குழுக்கள் சிறப்பாக ஆலைத் தொழிலைப்பற்றிய கமிட்டியார் நாட்டின் பொருளாதார நிலை உயர்தல் வேண்டும்; வாணிபம் செய்யப்பற்பல ஆலைகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்; அதற்கு முன்னர் நாட்டிலுள்ள மக்களுக்குக் குறைந்தது ஆள் ஒன்றுக்கு 30 கெஜம் துணியாவது வேண்டும் என்றும்; தென்னிந்தியாவிலே இப்போது வேலை செய்யும் கதிர்களில் 25% அதிகரிக்கச் செய்ய வேண்டும்; இங்கு பருத்தியும் திறமை மிக்கத் தொழிலாளிகள் சொற்ப கூலிக்குக் கிடைப்பதால் சண்டை முடிந்த உடனேயே நெசவாலைத் தொழிற்சாலைகள் ஏற்படுத்த வேண்டும் என்றும், இன்னும் பிறவும் குழுவினர் அரசியலார்க்கு எடுத்துக் கூறினர்.

அத்திட்டங்கள்படியே பல மாகாணங்களிலும் நெசவாலைத் தொழிற்சாலைகள் ஏற்படுத்த முயற்சி நடந்து வருகின்றது. இயந்திரங்களை வாங்க மத்திய அரசியலார் பல நிபுணர்களை மேல் நாட்டிற்கனுப்பியிருக்கின்றது. அவர்களும் இங்கிலாந்திலே தொழிலியந்திரங்கள் வாங்க முன் பணம் கொடுத்து வருகின்றனர். சென்னை மாகாணத்திற்கு 3½ லக்ஷம் கதிர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. 14 ஆலைத் தொழிற்சாலைகளும் ஏற்படுத்தப் போகின்றார்களாம். மத்திய சர்க்காரும் ஏனைய மாகாணத்திலும் இருக்கும் அரசியலும் தொழிற்சாலைகளை நாடெங்கும் ஏற்படுத்த முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும்போது சென்னையில் மட்டும் இனி நெசவுத் தொழிற்சாலை கூடாது; ஆனால் கதர் ராட்டை!

இந்தக் கதர் திட்டம் அல்லது நெசவாலை யொழிப்புத் திட்டத்தால் துணிப் பஞ்சம் மிகுதியாகும். உலகத்திலே பிற நாடுகளிலே ஒவ்வொருவனுக்கும் ஆண்டிற்கு 40 கெஜம் துணி என்பர்; ஆனால் நமது மாகாணத்திலே 11.12 கெஜம் கிடைக்காமல் திண்டாடுகின்றோம். இப்போது நாட்டிலுள்ள எல்லா நெசவாலைகளும் வேலை செய்கின்ற இக்காலத்திலேயே இப்படி என்றால் இனி வரப்போகும் நாளிலே எப்படி என்று கூறுவது? இந்தத் துணி பஞ்சத்தோடு வேலையில்லாத் திண்டாட்டம்; உணவுப் பொருள் கிடைத்தாலும் வாங்கப் பணமின்றிப் பட்டினி முதலியன வரப்போகின்றன. மில் ஒழிப்புத் திட்டத்தால் ஆலைத் தொழிலாளிகள் மட்டுந்தான் வேலையில்லாமல் திண்டாடப் போவதில்லை; நெசவாளிகள் பெரிதும் பாதிக்கப்படுவர் என்பது திண்ணம்!

இரண்டு யாண்டிற்கு முன்பு நமது மாகாணத்திலே உற்பத்தியான 48,400 கட்டு நூலிலே (பேல்கள்) 35,000 பேல்கள் கைத்தறி நெசவாளர்க்கு உபயோகப் பட்டுவந்தது. அதனால் நெசவாளர் மாதம்

(இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# தமிழ்ப்புலவர்கள் கோரிக்கை

சென்னை பச்சையப்பன் கல்லூரி தலைமைத் தமிழ்ப்பேராசிரியர் தோழர் வித்துவான் மு. வரதராசனார், B.O L ,M O.L. அவர்கள் தலைமையில் வேலூரில் 30—9—1946ல் நடந்த வடார்க்காடு மாவட்டத் தமிழ்ப் புலவர் மாநாட்டில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

தாய் மொழியை முதன் மொழி யாக்கினமைக்கு இம்மாநாடு பொதுவாக அரசியலாரையும், சிறப்பாகக் கல்வி மந்திரியாரையும் பாராட்டுகின்றது.

உயர் நிலைப் பள்ளிகளில் முதன்மொழி கற்பித்தற்கு ஒரு வாரத்திற்கு மொழி பெயர்ப்புத் தவிர, எழு காலப்பகுதியாவது (Period) கொடுக்கப்பட வேண்டும்

தமிழ் மொழியை முதன் மொழியாக்கினமைக்கு ஏற்றவாறு பள்ளி அதிகாரிகள் ஆசிரியர் பெயர் வரிசையில் தமிழாசிரியர் பெயர்களை முதன்மையாக எழுதல் வேண்டும்.

உயர் நிலைப்பள்ளிகளில் வேலை செய்யும் தாய் மொழி ஆசிரியர்கட்கு L. T. ஆசிரியர்களைப்போலவே சம்பளத் திட்டம் முதலிய எல்லா வகைகளும் சமமாக இருக்கவேண்டும்.

ஒரே தகுதி (புலவர் பட்டம்) பெற்ற தமிழாசிரியர்களிடையே மற்றெந்த ஆசிரியர்களிடையேயும் காணமுடியாத தலைமை, (Senior) உதவி (Junior) என்ற பிரிவு இருப்பது மிகமிகக் கேடானது. இப்பிரிவை வெகு விரைவில் போக்கவேண்டும்.

ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள் எல்லாவற்றிலும் பயிற்சியும் வித்துவான் பட்டமும் பெற்ற தமிழ்ப்புலவர்களையே தமிழாசிரியர்களாக நியமிக்க வேண்டும்.

உயர்வு நிலைப்பள்ளி இறுதித்தேர்வு (S. S. L. C) எழுதுமிடத்திற்கு மேற்பார்வையாளர்களாகத் (Hall Superintendent) தமிழாசிரியர்களையும் நியமிக்க வேண்டும்.

தமிழ்மொழியில் புலவர் (வித்துவான்) பட்டம் பெறுகிறவர்களுக்கு உரிய பாடங்கள் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள தேர்விற்குச் செல்வோர் ஒரு முறை ஒன்று அல்லது இரண்டு பகுதிகளில் தேர்ச்சி பெறுவிட்டால் அவர் மறுமுறை தேர்விற்குச் செல்லும்பொழுது, மீண்டும் ஆறு பகுதிகளையும் எழுதியே தீரவேண்டியிருக்கிறது. B. A. முதலிய தேர்விற்குச் செல்வோர் தேர்வு பெறாத பகுதியை மட்டும் எழுதித் தேர்ச்சி பெறுகின்றனர், இவ்வுரிமையைத் தமிழ்ப்புலவர் தேர்விற்குச் செல்வோருக்கும் அளித்தே தீரவேண்டும்.

B. A. முதலிய தேர்விற்குச் செல்வோர் ஆண்டில் இருமுறை மார்ச்சு, செப்டம்பர் தேர்வு எழுதுவதுபோல் தமிழ்ப்புலவர் தேர்விற்குச் செல்வோருக்கும் ஆண்டில் இருமுறைத் தேர்வு எழுதும் உரிமை தரல்வேண்டும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தார் நடத்தும் வித்துவான் தேர்விற்குச் தனி பட்ட முறையில் செல்லுவோருக்கு வயது முப்பதாக இருப்பதை இருபதாக்க வேண்டும்.

வயது சர்டிபிகேட் (Certificate) ஒரு பதிவு பெற்ற டாக்டர் இடம் பெற்றால் போதும்

மேனாட்டுக் கலை நூல்கள் இயன்றவரையில் தனித்தமிழ்ச் சொற்களால் மொழி பெயர்க்கப்படவேண்டும்.

தொடக்கப்பள்ளி முதலாக உயர்நிலைப் பள்ளி இறுதிவரையில் உள்ள தமிழாசிரியர்களை மேற்பார்வையிட மேற்பார்வையாளர்கள் தமிழ் அறிஞராகவே இருத்தல் வேண்டும்.

பதிவுபெற்ற பட்டதாரிகளுக்குப் பல்கலைக் கழகத் தேர்வுகளில் வாக்குரிமை இருத்தல்போல், தாய் மொழிப்பட்டமாகிய வித்துவான் பட்டம் பெற்றவர்களிடமும் பதிவு செய்யவும் வாக்குரிமை அளிக்கவும் இடந்தரவேண்டும்.

மொழி பெயர்ப்புப் பகுதி ஆங்கில அறிவைச் சோதிப்பதாக இருப்பதால், அதனை ஆங்கிலப் பாடத்தோடு சேர்த்துத் தமிழுக்கே தனியாக நூறு எண்கள் (Marks) வைக்குமாறு இம்மாநாடு கேட்டுக்கொள்கின்றது.

வித்துவான் பட்டத்தேர்வில் வெற்றி பெற்றத் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக ஆசிரியத் தொழிலில் இருந்து B. O. L. பட்டம் பெற விரும்புவோர், இன்டர்மீடியட் தேர்வுக்குச் செல்லும் போது மீண்டும் மூன்றும் பகுதி நான்காம் பிரிவு (III Part D Group) எழுதாமலேயே இன்டர்மீடியட் முதல் பிரிவு (English) மட்டும் எழுதி B. O. L. தேர்வுக்குச் செல்லலாம் என்று விதி வகுக்குமாறு சென்னைப் பல்கலைக் கழகத்தாரை இம்மாநாடு வேண்டிக்கொள்கிறது.

தமிழ் மொழியின் முன்னேற்றமும் தமிழ் மக்களின் முன்னேற்றமும் கருதித் தமிழ் மாகாணம் விரைவில் பிரிக்கப்படல் வேண்டும்.

தமிழாசிரியர்கட்குத் திருத்தும் வேலை அதிகமாக இருப்பதால் ஒவ்வொரு பள்ளியிலும் திருத்தும் வேலை ஆசிரியரை (Tutor) நியமித்தல் வேண்டும்.

(இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம்)

## "விடுதலை ஆட்சி"

(சிவப்பிரகாசம்)

அறிவுக்கு விடுதலை இல்லாவரை—எந்த
அரசியல் விடுதலை பெற்று மென்ன ?
செறிந்துள தீமைகள் ஏகிடுமோ?—அங்குச்
சீர்திருத்தம் தலை காட்டிடுமோ?
மறச்செயல் ஒன்றையே நம்பிவாழுங்—கூட்டம்
மக்களறிவுக்கு வேலியிட்டே,
அறச்செயல் கைவிட்டுத் தீத்திறத்தால்—பற்றும்
ஆட்சியில் நன்மைக ளார்ந்திடுமோ?

அத்தகை ஆட்சியை 'ராம ராஜ்யம்'—என்றோ
அல்லது 'சிவநேசன்! ஆட்சியென்றோ
மெத்தவே போற்றிப் புகழ்ந்திடினும்—அதை
'விடுதலை ஆட்சி'யென் றோதிடினும்,
எத்தனைநாள் அது நிலைத்துவிடும்?—மக்கள்
எத்தனை நாளைக்குத் தூங்கிடுவார்?
சித்தமி ழுந்தஇந் நாட்டினர்கள்—ஒன்று
சேர்ந்தறிவு பெற்றால் என்னாகும்?

தக்கபடை பலங் கொண்டிருந்தும்—பொல்லாச்
சர்வாதிகாரம் செலுத்தி வந்தும்,
மக்களுணர்வினை மாய்த்து வந்தும்—கொடும்
வஞ்சகச் செயல்பல செய்து வந்தும்,
எக்களிப்புக் கொண்டே நாட்டை யாண்டோர்—பலர்
என்னானார்? சரித்திரம் தேடுவீர்!
செக்குமாடாய் மக்கள் வாழ்ந்திடவே—செய்யும்
தீயர் களாட்சியும் நிலைத்திடுமோ?

சிறு கதை

# ★ இரு கடிதம் ★

(பூந்தோட்டம் து. கோ. சங்கரன்)

"நாளைக்கு உங்களிடம் வந்து சேரும் எனது மற்றொரு கடிதம். என்னைப்பெற்ற தாய் தந்தையர் என்று நினைத்து உங்கள் மனதைத் திருப்ப முயன்றேன். அதிலே தோல்வியடைந்தேன். மாதங்கள் இரண்டு கடந்தன. அவளுக்குக் கடிதம் எழுதவே இல்லை. என்ன நினைக்கின்றளோ? இந்தக் கடைசி கடிதமாவது உங்கள் உள்ளத்தை மாற்றவில்லை யென்றால் அது என் துரதிஷ்டம் தான். கடிதத்தைப் படிப்பீர்கள்; அப்போது நான் எங்கே இருப்பேன் என்று எனக்கேத் தெரியாது. ஆம். அவளிடம் தான் செல்கிறேன். வணக்கம், போய் வருகிறேன்."

ஆலத்தூர் அக்ரகாரத்தில் அனந்தசயன ஐயங்கார் ஆழ்ந்த யோசனையில் ஆழ்ந்திருந்தார், நேற்று வந்த கடிதத்தைப் பார்த்து.

"சார்! போஸ்ட்" என்று சொல்லிக் கொண்டே இரு கடிதங்களை அவர் கையிலே கொடுத்துவிட்டுப் போனான், போஸ்ட்மேன் பொன்னுசாமி.

அதிலே ஒன்று அவனுடைய கடிதம். அவன் வீட்டில் இருந்தால் தானே அக்கடிதம் அவன் கையில் கிடைப்பதற்கு!

★ ★ ★

"என் மனதில் பழைய நினைவுகள் ஒவ்வொன்றாக நினைவுக்கு வருகின்றன. அவள் அழகிற்கு நான் அடிமையாகி விட்டதை என்னால் மறக்க முடியாது. அவளோடு சிரித்து விளையாடியதையும், கேளிக்கைகளையும், சந்தோஷப்பேச்சு வார்த்தைகளையும் நினைக்கும் பொழுதே என் மனம் வெடித்து விடும்போல் இருக்கிறது 'அவள் பக்கமே சதாவும் இருந்து பேசிக்கொண்டிருக்க வேண்டும்' என்று என் மனம் எத்தனை தடவைகள் எண்ணியிருக்கும்! அவளைப் பார்க்காமல் இருக்க முடியாதென்று எத்தனை தடவைகள் புரட்சி செய்திருக்கும் என் கண்கள்! அவள் வீட்டிற்குச் செல்ல எவ்வளவு துடி துடித்திருக்கும் என் கால்கள். பொங்கி எழும்பாலின்மேல் தண்ணீர் தெளிப்பது போலல்லவா என்னை அடக்கி வைத்திருந்தீர்கள்? சுயேச்சையை விரும்பும் கிளியை கூட்டில் அடைத்துவைத்து பாலும் பழமும் கொடுப்பது போலல்லவா என்னை அடைத்து வைத்திருந்தீர்கள். சாதியின் பேராலும், சாஸ்திரத்தின் பேராலும் சத்தியமல்லவா செய்தீர்கள்? ஆண்டவன் பெயரைச் சொல்லியல்லவா ஆணையிட்டீர்கள். குலத்தின் பெயரால் குந்தகம் செய்தீர்கள்! ஆசாரத்தின் பேரால் ஆணவம் பேசினீர்கள். வைதீகத்தின் பேரால் வசை மாரிப் பொழிந்தீர்கள்.

குலம் குப்பையில் போய்விடுமாம்! கோத்திரம் சாக்கடையில் அடைத்துவிடுமாம்! சாதி சாய்ந்துவிடுமாம்! மதம் மடிந்துவிடுமாம்! இன்னும் என்ன, என்ன சொன்னீர்கள்! அப்பப்பா! கேட்க முடியவில்லையே. சகிக்கவும் கூடமுடிந்ததா? அதுவும் முடியவில்லை. அவளைப் பார்த்து பிரமித்துவிட்டபோது நான் உயர்ந்த குலத்தினன் என்பதை நினைத்ததா என் மனம்? அவள் தாழ்ந்த சாதியினள் என்றுதான் மறுத்ததா? என்கண்கள் அவளைப் பார்க்கக் கூசிற்று? இல்லையே. அவள் அழகை அள்ளிப் பருகின போது வேண்டாமென்று சொல்லிற்று என் இருதயம்! நான் பிர்ம்ம குலத்தான் என்பதையா ஞாபகத்தில் வைத்திருந்தேன்! சாதியில் மேல் கீழ் பார்த்தா அவளை விரும்பினேன். இந்து மதம், முஸ்லீம் மதம் என்பதையா நினைத்தேன் அவளை அண்டியபோது. எதைத்தான் நினைத்தேன்? ஒன்றுமில்லையே! எல்லாவற்றையுமே தான் மறந்தேன்! என்னையன்றே மறந்து நின்றேன்! நாங்கள் எங்களையே மறந்து எக்களித்தது பாபமா? இரு மனம் ஒரு மனதாகியது மறியற்றச் செயலா? ஒருவரை ஒருவர் விரும்பியது விபர்த்தமா? நாங்கள் மனிதப் பிறவிதானே! எங்கள் உணர்ச்சியை ஏன் கட்டுப்படுத்த வில்லை இந்த சாதி ஆசாரமும் மதக் கட்டுப்பாடும்? தொட்டில் பழக்கமாக இருந்த இந்தச் சாதி சம்பிரதாயம் என்னை விட்டு நீங்கிவிட்டதா? பால் புகட்டுவது போல் புகட்டியிருந்த சாத்திரம், வேதம் எல்லாம் ஏன் தடை செய்யவில்லை என்னை? நான் அவளைப் பார்த்தபோது என் பார்க்கவிடவில்லை இந்தக்கட்டுப்பாடுகள்? மறந்துவிட்டனவா? இல்லை மடிந்து விட்டனவா? இயற்கையைக் கொன்று செயற்கையைச் சிருஷ்டிப்பது தானே வேகத்தின் செயலும் சாஸ்திரத்தின் கூற்றும்.

இயற்கை இயற்கையின் விநோதத்தை காண்பித்துவிட்டது. இயற்கையை வெல்ல முடியுமோ? அவள் தாழ்ந்த ஜாதியில் பிறந்தவள் என்று ஏன் சொல்ல வேண்டும்? அவள் மனிதவர்க்கத்தில் சேர்ந்தவள் அல்லவா? அவள் இருதயம் என்ன மிருக இருதயமா? தாழ்ந்த சாதியினளுக்கு ஏன் அவ்வளவு அழகு? ஏன் அவ்வளவு சௌந்தர்யம்? ஏன் அவ்வளவு வனப்பு? சாதியைக் கண்டா சௌந்தர்யம் ஏற்பட்டது! குலத்தைக் கண்டா குணம் உண்டாயிற்று! கீழ் குணத்தவளென்றால் எதில் உயர்ந்த குணத்தாரைவிட கீழ்மை பட்டிருக்கிறாள்? அறிவில் அசடா? அவள் தான் F. A. படிக்கிறாளே! மதியில் மக்கா? பேச்சில் ஊமையா? செயலில் தான் சிறியவளா? இல்லையே. பின் ஏன் அவளைப் பழிக்க வேண்டும்? அவள் பெற்றோர்களை இழிவுபடுத்தி ஏன் நிந்திக்க வேண்டும்? அவரவர்கள் விரும்பிய பழக்க வழக்கங்களை அநுசரித்து வந்தால் அதில் தப்பிதமென்ன? "நாங்கள் கீழ் குலத்தார்கள் தான்; தாழ்ந்த சாதியார் தான்; நீங்கள் எங்களைத் தொடாதீர்கள்; நாங்கள் எப்பொழுதும் கீழ்மையாகத்தான் இருப்போம்; கீழமையாக இருக்கவே நாங்கள் விரும்புகிறோம்" என்று மேல் சாதியாரிடம் பறைச் சாற்றினார்களா? பிரசாரம் தான் செய்தார்களா? பின் எப்படி அவர்கள் கீழ்குலத்தவர்கள் ஆனார்கள்? கீழ்குலம் என்று பாவிப்பவர்கள் இருப்பதினால் தானே இவ்வளவு சங்கடமும்! பகுத்தறிவு உள்ளவர்களையும், பொது அறிவு இருந்தவர்களையும், தன் வயப்படுத்தி ஆரியம் என்ற பெயரால் அவர்களுள் பலபாகுபாடுகளை உண்டாக்கி, உயர்வு தாழ்வு என்பதையும் சிருஷ்டித்து அவர்களுக்கு இருந்த கொஞ்சம் நஞ்சம் பகுத்தறிவின் பல்லையும் பகவான் அவதாரத்தின் பேராலும், ஆற்றலை ஆகம புராணங்களின் பேராலும் பிடுங்கி எறிந்தவர்கள் யார்? பிரமத்தின் பிரதிநிதி என்று சொல்லிக்கொண்டவர்கள் யார்? கீழ்மையை சிருஷ்டித்தது எவர்? பரமன் பூமியைப் பாயாக சுருட்டிய படலத்தை படித்துக் காட்டியது யார்? சாமியா? அல்லது சாமியின் சாமியாரா? பதில் பகரமுடியுமா? இதற்கு உங்களால் ஏற்பட்ட நான்கு வருண பேதங்களும், நாலாயிர பிரபந்தங்களும் எப்படி பரிணமிக்கிறது பாருங்களேன்? தனி வர்க்கங்கள் என்று சொல்லி ஆர்ப்பரிப்பதைப் பார்த்தீர்களா? ஒன்று போனவழி ஒன்று போகாததைப் பார்த்தீர்களா? உயர்ந்த நோக்கத்திற்கு பங்கமாய் இருப்பதைப் பார்த்தீர்களா? தேசத்திற்கே கேடானது என்பதைப் பார்த்தீர்களா? இதெல்லாம் நீங்கள் விதைத்த விதையின் பலன் அல்லவா? பாகவத பாராயணம் பண்ணி பார்த்திபனை மயங்க வைத்தீர்களே! உங்கள் பாரதம், பாகவதம், கீதை, ராமாயணம் இவைகள் எல்லாம் ஜன சமூகத்திற்கு செய்த சேவைதான் என்ன? கயவனை அறிவுள்ளவனாக்கியதா? சோனகிரியை வீரனாக்கியதா? சோம்பேறியை சுறுசுறுப்புள்ளவனாக்கியதா? நாட்டை மறந்துதானே நான்கு வருணங்கள் வகுத்தீர்? தேசத்தை மறந்துதானே தேவாரம் பாடினீர்? தாய்நாட்டை மறந்து தானே தவப்பெருமை பேசினீர்? பிறந்த நாட்டிற்கு உங்களால் சிருஷ்டிக்கப்பட்ட சாதி சமயங்களால் எள்ளளவாவது பிரயோசனம் உண்டா? நீங்கள் தனித்து அக்ரகாரம் ஏற்படுத்திக்கொண்டதுதான் மிச்சம். தனிச்சேரி ஏற்படுத்திக் கொடுத்ததுதான் கண்ட பலன். பிறரை பாகுபாடு படுத்தினீர்களே நீங்களாவது அதிகாரம்செலுத்தினீர்களா? இல்லை. இனியாகிலும் அறிவீர்கள் என்று நம்புகிறேன். எங்களை, ஆம்! அவளையும் என்னையும் உங்கள் சமூகம் பழிக்கும். அதைப் பற்றி எனக்கு ஒரு சிறிதும் பயமில்லை. என்னை B.A. வரையில் படிக்க வைத்தீர்கள். அதற்கு என் மனபூர்வமான நன்றி. உங்களுடன் இருந்து வாழவழியில்லை. உங்கள் ஔதாரித்தனமான மண்மூடிப்போன பழக்க வழக்கங்களுக்கு என் வாழ்வை பலி இடமுடியுமா? சிறிது யோசித்துப் பாருங்கள். இறுதியாக அவளிடம் போகிறேன். வணக்கம்".

★ ★ ★

அவர் கண்களிலிருந்து கண்ணீர் முத்து முத்தாக விழுந்தன. உண்மைதானே அவன் எழுதியிருப்பவை எல்லாம்! சிந்தனை சிறிது நேரம் அதைப்பற்றி. பிறகு அவர் அறியாமலே அவருடைய கைகள் அவளுடைய கடிதத்தையும் பிரித்தன.

★ ★ ★

"வேறுவழி கிடையாது இருந்தாலும் அவ்வழிகளில் போக விரும்பவும் இல்லை. இந்த துர்பாக்கியவதியின் வாழ்வை சுகப்படுத்தும் எண்ணம் இருக்குமேயானால் இந்தக் கடிதம் என் இறுதி முயற்சியை வீண்போகாமல் செய்யட்டும். அரசாங்க சட்டம், நீதி இவைகளின் உதவியால்

இதன் தொடர்ச்சி 6-ம் பக்கம்

கோழி கூவிற்று! வையம்,
கொண்டதோர் இருளைத், தங்க
மெழியால் உழுதான் அந்த
விரிகதிர்ச் செல்வன்; பின்னர்
ஆழிசூழ் உலகின் காட்சி
அரும்பிற்று! முனைவிழ்ந்து
வாழிய வையமென்று
மலர்ந்தது காலை வானம்!

—புரட்சிக்கவி பாரதிதாசன்


# உதயம்

மலர் 1 17—11—46 இதழ் 16


## சர்வாதிகார ஆட்சியா?

சென்னையில் நடக்கும் ஆட்சி ஜனநாயக ஆட்சியா சர்வாதிகார ஆட்சியா என்று ஒவ்வொருவரும் கேட்க வேண்டிய நிலையில் இருக்கிறது, அவ்வாட்சியின் போக்கு. பொதுவாக ஜனநாயக ஆட்சியாக இருந்தால் பொது மக்களின் எதிர்ப்புக்கு மதிப்பு கொடுக்கும்; செவி சாய்க்கும். மக்களின் மூலாதாரமான பிரச்சினைகளைக் குறித்து ஏதாவது எதிர்ப்பு தோன்றினால், சர்வஜன ஓட்டு எடுக்கப்படும். அதன் முடிவின்படி தான் நடக்கும். ஆனால் சர்வாதிகார ஆட்சியில் தான், ஆளுபவர், தங்கள் கொள்கையை எந்த வகையிலாவது புகுத்துவார்கள்; பொதுமக்களின் எதிர்ப்பைக் குறித்து இலட்சியம் பண்ணமாட்டார்கள்.

இன்று சென்னை காங்கரஸ் சர்க்காரின் போக்கு எந்த இலட்சணத்திலிருக்கிறது என்பதைப் பாருங்கள்?* தங்கள் கொள்கையை எப்படியாவது புகுத்துவது என்ற போக்கிலே நடந்து கொள்கிறார்களா இல்லையா? இது இன்றுமட்டுமல்ல என்றும் இதுபோலவேநடந்து வந்திருக்கிறார்கள் காங்கரஸ்காரர்கள். அன்று ஆச்சாரியார் சர்க்கார் இருந்துவந்த காலையில் இதுபோலவே பிடிவாதமாக நடந்து வந்திருக்கிறது. ஹிந்தி விஷயத்தை எடுத்துக்கொண்டாலே விளங்கும். அதுபோலவே தான் பிரகாசம் சர்க்காரும் இப்பொழுது நடந்து கொள்கிறது.

பிரகாசம் சர்க்கார் கதர் திட்டத்தை புகுத்த முடிவு செய்தது. கதர் திட்டத்தை வேண்டுமானால் புகுத்தி தொலையட்டும் என்றா நினைத்தால், மில்களை ஒழிக்கும் திட்டத்தையும் புகுத்தப்போவதாக தெரிவிக்கிறது. ஏன்? முடிவு செய்திருப்பதாகவே அறிவிக்கப்படுகிறது. இவ்வாறு முடிவு செய்திருப்பதாக அறிவித்ததிலிருந்து நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், ஏன்? காங்கரஸ் கட்சியிலிருந்தும் எதிர்ப்பு கிளம்பிற்று. பிரகாசம்காரு சிறிதும் அசைந்து கொடுப்பதாகத் தெரியவில்லை. இந்திய சர்க்காரும், பிரகாசம் சர்க்காரின் கோரிக்கைக்கு இணங்க மறுத்து விட்டதாகத் தெரிகிறது. அதாவது,

சென்னை மாகாணத்துக்கு ஒதுக்கப்பெற்ற புதிய ஆலை கதிர், தறிபங்கீட்டை ரத்து செய்து விடுமாறு கோரி மாகாண சர்க்காரிடமிருந்து இந்திய சர்க்காருக்கு வந்த விண்ணப்பத்துக்கு பதிலளிக்கையில், பங்கீடு ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டு விட்டதால் இனி அது குறித்தெதுவும் செய்வதற்கில்லையென வரையறுத்து தெரிவித்து விட்டனரென்று கூறப்படுகிறது.

அப்படியிருந்தும் பிரகாசம்காரு சற்றும் தம்முடிவை மாற்றிக் கொள்வதாகத் தெரியவில்லை. அதுமட்டுமா, மில்களை அபிவிருத்தி பண்ணுவதோ, புதியமில்களை கட்டுவதோ மாகாண சர்க்காருக்கு சம்பந்தப்பட்ட விஷயமல்ல; மத்திய சர்க்காருக்கு சம்பந்தப்பட்ட விஷயமென்றும், இதில் தலையிட மாகாண சர்க்காருக்கு அதிகாரமில்லையென்றும் இராசாங்க சபையில் விளக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், பிரகாசம்காரு தமது பிடிவாதத்தைவிட்டுக் கொடுப்பதாகத் தெரியவில்லை. எப்படியாவது தமது கொள்கையை புகுத்துவதென்றே கங்கணம் கட்டிக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது. இது சர்வாதிகாரத்தனத்தை விளக்க வில்லையா? சிந்தித்துப் பார்க்கவேண்டும் பொதுமக்கள். இந்த விஷயத்தில் ஏனோதானோ என்று இருத்தல் கூடாது. இப்பொழுது ஏமாந்துவிட்டால், இதன் விளைவு எவ்வளவு மோசமானதாக விருக்குமென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்திய சர்க்காரின் கொள்கை எவ்வாறு இருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்திய சர்க்காரின் பொதுப்படையான கொள்கை மில்களை ஆதரிப்பதாக இருக்கிறதென்பது மத்திய சர்க்கார் மேல் நாடுகளுக்கு இயந்திர சாதனங்களை வாங்கி வருமாறு பிரதிநிதிகளை அனுப்பியிருப்பதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். மற்ற மாகாணங்களும் மில்களை அதிகப்படுத்துவதில் கருத்தாயிருக்கின்றன என்பதை, அவைகள் மத்திய சர்க்காரின் இந்த யோசனைக்கு ஆதரவளித்திருப்பதிலிருந்தும் தெரிந்துகொள்ளலாம். அவ்வாறு இருக்கையில், சென்னை மாகாணம் மட்டும், கதர் திட்டத்தைக் கட்டியழ வேண்டுமா? மற்ற மக்கள் எல்லாம் கஷ்டப்படாமல் தேவைக்கு வேண்டிய மெல்லிய ஆடைகளை பெறும்போது, இம்மாகாண மக்கள் மட்டும் உழைத்துக் கஷ்டப்பட்டு, போதுமான உடையுமில்லாமல், அதுவும் கோணிப்பை போன்ற உடையைப் பெறவேண்டுமா? இது எவ்வாறு நியாயம் என்பதை எண்ணி பார்க்க வேண்டும்.

தோழர் பிரகாசம் இது விஷயத்தில் ஏன் இவ்வளவு பிடிவாதம் காட்டுகிறார் என்பதை எண்ணிப் பார்த்தால், சென்னை மாகாணத்திலே தமிழ் நாட்டில் தான் மில்கள் இருக்கின்றன; இதனால் தமிழ் நாடு தான் செல்வப் பெருக்கடைகிறது. இதை யொழிக்கச் செய்யப்படும் சூழ்ச்சியா என்றும் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

சென்ற 11-ந் தேதி சென்னை செயின்ட் மேரி மண்டபத்தில், மாஜி மந்திரி தோழர் S. முத்தையா முதலியார் அவர்கள் தலைமையில் சென்னை மாகாண நெசவுத் தொழில் பாதுகாப்பு மாநாடு நடைபெற்றிருக்கிறது. தலைவரும், திறப்பாளர் தோழர் அப்துல் மஜீத் அவர்களும், வரவேற்பாளர் தோழர் A. K. தங்கவேலர் அவர்களும் தீர்மானங்களை ஆதரித்துப் பேசிய தோழர்கள் சி. என். அண்ணாதுரை, என். வி. நடராசன், தனபாக்கியம், ஏ. பி. ஜனார்தனம், டாக்டர் எ. கிருஷ்ணசாமி அவர்களும், பிரகாசம் காரு சர்க்காரின் இம்முடிவு நாட்டுக்கு எவ்வளவு தீமையை விளைவிக்குமென்றும் பொருளாதாரத்தை எவ்வளவுதூரம்

பாதிக்குமென்றும் நன்கு விளக்கி யிருக்கிறார்கள். சென்னை மாகாணத்தில் புதிய மில்களை கட்டுவதற்காக மத்திய சர்க்காரின் அனுமதி பெற்று அதற்கான நடவடிக்கைகளை எடுத்துவரும் 25 மில் காரர்களும் நஷ்ட ஈடு கோரப் போவதாகவும் தெரிகிறது. எவ்வளவு எதிர்ப்பு இருந்தாலும், மேரு பர்வதமே புரண்டு வந்தாலும் தான் கொண்ட பிடிவாதத்தைவிடப் போவதில்லை என்ற தோரணையில் தோழர் பிரகாசம் அவர்கள் அறிக்கைகளை விட்டுக்கொண்டிருப்பது சிறிதும் ஜனநாயகமாகாது, விவேகமுமாகாது. இது சர்வாதிகாரத் தன்மையையே விளக்கும். எனவே தோழர் பிரகாசம் காரு, அனாவசியமான எதிர்ப்பை தேடிக்கொள்ளாமல் தம் பிடிவாதத்தைவிட்டுக்கொடுப்பார் என்றே நம்புகின்றோம்.

## எல்லை யில்லையா?

தொழிலாளி இப்பொழுது ஓரளவுக்கு விழிப்படைந்து விட்டான். உலகில் காண்பவைகள் எல்லாம் தன்னுடைய உழைப்பால் வந்தவை என்பதை தெரிந்து கொள்கிறான். தன் நிலையைக் குறித்து எண்ணிப் பார்க்கிறான். தன் நிலையை யுயர்த்த ஆசைப்படுகிறான். அதனால் உரிமைகளுக்காக போராடுகிறான். இவ்வுரிமை போராட்டத்தை பலாத்காரத்தால் அடக்கி விடலாம் என்று எண்ணுவது புத்திசாலித்தனமாகாது. திருவிதாங்கூரில் சர். சி. பி. சர்க்காரும் சென்னையில் தோழர் பிரகாசம் சர்க்காரும் இதில் போட்டியிடுவதாகவே தோன்றுகிறது. அங்கும் தொழிலாளர் கிளர்ச்சியை அடக்க துப்பாக்கிப் பிரயோகம் தாராளமாக உபயோகப் படுத்தப்படுகிறது. துப்பாக்கிப் பிரயோகத்தால் எவ்வளவு பேர் கொல்லப்படுகிறார்கள் என்பதே வெளி உலகத்துக்குத் தெரியாமல் செய்திகள் இருட்டடிப்பு செய்யப்படுகிறது. இங்கும் தொழிலாளர் கிளர்ச்சியை அடக்க துப்பாக்கிப் பிரயோகம் உபயோகப் படுத்தப் படுகிறது. திருச்சியில் நடந்த துப்பாக்கியின் வெடிசப்தம் மறைவதற்கு முன்னதாகவே, கோவையில் வெடி சப்தம் கேட்கிறது. 2 பெண்கள் உட்பட 7 பேர் துப்பாக்கி குண்டுக்கு இரையாகி யிருக்கிறார்கள் என்று பத்திரிகைச் செய்திகளிலிருந்து தெரியவருகிறது. தொழிலாளரின் உரிமைப் போரை இத்தகைய அடக்கு முறையால் அடக்கி விடலாமென்று நினைப்பது பெரும் ஏமாற்றத்தையே யளிக்கும். எதற்கும் ஒரு எல்லை வேண்டும். துப்பாக்கி முனையினால் தொழிலாளரின் உரிமைப்போரை அடக்கியதாக சரித்திரமில்லை. தற்காலிகமாக அடக்கலாமேயல்லாது நிரந்தரமாக அக்கிளர்ச்சியை அடக்கிவிட முடியாது. கொதிப்பு இருந்து கொண்டேயிருக்கும். தொழிலாள மக்களுக்கு ஆட்சியினர் மீது என்றும் தீராத பகையையே வளர்க்கக் கூடியதாக யிருக்கும். ஆட்சியினர் மீது வெறுப்பும் மனக்கசப்பும் வளர விடுவது நன்மையை பயக்காது. இதை சென்னை சர்க்கார் எண்ணிப் பார்க்கட்டும்.

## ஸ்தல ஸ்தாபன தேர்தல்

ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் என்பது அந்தந்த ஸ்தல மக்களின், கல்வி, சுகாதாரம், போக்கு வரத்து சாதனங்கள் முதலியவைகளைப் பொருத்ததென்பது ஏற்கனவே விளக்கியுள்ளோம். இதில் எத்தகைய அரசியல் கொள்கைக்கும் இடமில்லை யென்றும் எடுத்துக் காட்டியுள்ளோம். குறித்த காலத்தில் தேர்தல் நடந்தால் தான் பொது மக்கள் தங்களின் சரியான பிரதிநிதியை அனுப்பித் தங்களுக்கு வேண்டிய நலன்களை செய்துகொள்ள முடியும். கடந்த பல வருடங்களாக இந்த உரிமையை பொதுமக்கள் இழந்து வருகின்றனர். இதுவரை யுத்தம் என்று சாக்குப்போக்குச் சொல்லி வந்தார்கள். இப்பொழுது பொதுத் தேர்தல் நடந்து பொது ஜன சர்க்காரும் நிறுவப் பட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்படி யிருந்தும், இனியும் இவ்வுரிமை தடுக்கப்பட்டே வருகிறது. அதாவது ஸ்தல ஸ்தாபன தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டே வருகிறது. இதற்கு சென்னை சர்க்கார் சொல்லும் காரணங்கள் எந்த வகையிலும் ஒப்புக்கொள்ளக் கூடியதாகவே யில்லை. வகுப்புக் கலவரப் பூச்சாண்டியைக் காட்டி மிரட்டுகிறார்கள். தனித் தொகுதி முறையும் ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களும் இருப்பதால் இதற்கு சிறிதும் இடமேயில்லை. இது ஜன நாயகக் கொள்கைக்கே முரணானதாகும்.

## உபாத்தியாயர்கள் நிலை உயர்வு

இந்நாட்டின் கல்வி வளர்ச்சியைப் பற்றி எண்ணுவோர் எவருக்கும் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலையிலிருக்கிறோம். இதற்குள் பல காரணங்களுள் ஆசிரியர்களின் நிலை உயர்வின்மை ஒன்றாகும். இது குறித்து ஆசிரியர்கள் இன்றைய சர்க்காருக்கு முறையிட்டார்கள், கிளர்ச்சி செய்தார்கள். சர்க்காரும் ஏதோ ஓரளவுக்கு மனம் இரங்கி யிருப்பதாகத் தெரிகிறது. மதுரையில், கல்வி மந்திரி தோழர் டி. எஸ். அவினாசிலிங்கம் அவர்கள் பேசுகையில், உபாத்தியாயர்கள் சம்பளத்தையும் அந்தஸ்தையும் உயர்த்த 2 கோடியே 8 லட்சம் செலவில் ஒரு திட்டம் தயாரித்திருப்பதாகவும் மந்திரி சபையின் அங்கீகாரத்திற்காக வைத்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். இது மகிழ்ச்சிக் குறிய செய்தியென்றாலும் இத்திட்டம், எந்த ஆசிரியர்கள் நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறதோ— தாழ்ந்திருக்கிறதோ அவர்களுக்கு உதவக் கூடியதாக யிருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். உள்ளவனுக்கே கொடுக்கப்படும் என்பதற்கிணங்க, இத்திட்டம் போய் விடக்கூடாதென்பது தான் நமது முழு ஆவலாகும். ஆரம்ப ஆசிரியர்கள் தான் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் நிலையை உயர்த்தக்கூடியதாக இருக்கவேண்டும் இத்திட்டம். பார்ப்போம் எந்த உருவில் வெளி வருகிறதென்பதை.

## விலை கட்டுப்பாடு

போர் மூண்டதிலிருந்து பொருள்களின் விலை விரு விரென்று விஷம் போல் ஏறிவிட்டது. இதற்குக் காரணம் பொருள்கள் கிடைப்பது அரிதாகி விட்டதாகும். போர் மூண்டதின் காரணமாக, உற்பத்தியின் அளவு குறைந்தது ஒன்று, மற்றொன்று போக்குவரத்தில் தடை ஏற்பட்டதுமாகும். தேவைக்கான பொருள் கிடைக்காததால் பொருள்களின் விலையை உயர்த்திவிட்டார்கள். இதனால் மக்கள் பட்ட கஷ்டத்திற்கு அளவே யில்லாது போயிற்று. இதை எவ்வளவு காலத்திற்குத்தான் சகித்துக்கொண்டிருக்க முடியும்? இதனால், சர்க்கார் பொருள்களின் விலையைக் கட்டுப் படுத்தினார்கள்; முக்கியமான பொருள்களுக்கு ரேஷன் அளவு ஏற்படுத்தலானார்கள். இவ்வாறு செய்ததினால், ஓரளவுக்காவது தேவையான பொருள் கிடைக்க முடிந்தது என்றே சொல்லலாம். இதில் பல குறைகள் இல்லாமல் இல்லை. இருந்தாலும், விலை கட்டுப்பாடு முறை வரவேற்கக்கூடியதேயாகும். பொருள்கள் தாராளமாக போர் ஆரம்பமாவதற்கு முன் இருந்தது போல் கிடைக்கிறவரை, விலை கட்டுப்பாடு இருக்கவேண்டியது அவசியமாகும். இதை நீடிக்கச் செய்வதில் இடைக்கால மத்திய சர்க்கார் உறுதிகொண்டிருப்பதை நாம் வரவேற்கிறோம். ஆனால், இதிலுள்ள குறைகளை நீக்கி, யாவருக்கும் கிடைக்குமாறு விநியோகிக்கு முறையை திருத்தியமைக்க வேண்டியது முக்கிய கடமையாகும். இதனைச் செய்யாதவரை இம் முறையினால் யாதும் பயனடைய முடியாது. இதைச் சர்க்கார் சிந்தித்துப் பார்த்துத் தக்க நடவடிக்கைகளை உடனே எடுக்குமென எதிர்பார்க்கிறோம்.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

## இரு கடிதம்

உன்னையடைய எள்ளளவும் இம்மியும் எண்ணமில்லை எனக்கு. தர்மம், நீதி, நியாயம், ஒழுக்கம், ஒழுங்கு இவைகளின் சட்டதிட்டங்களின் பெயரால் மாத்திரமே உன்னை நான் அடைய விரும்பி இந்த கடிதம் வரைய விழைந்தேன். மனசாட்சியை மண்ணில் புதைத்து விட்டு நம்பிக்கைத் துரோகம் செய்ய துணிந்தாயானால் ஒரு பேதைப்பெண்ணின் உயிரை—ஒரு அபலையின் ஆவியை போக்கிய கொலைகாரனின் கதியை அடையாமல் போக மாட்டாய் என்பது நிச்சயம். ஒருமித்த மனத்தினராய் இந்த உலக இன்பங்களை அனுபவிக்கும் ஆண் பெண்களைக் கண்டு என்மனதும் விழைகிறது, அந்த இன்பங்களை நுகர. இந்தப் பாழும் ஆசையால் தான் என்வெட்கத்தையும் விட்டு உன்னை கெஞ்ச வேண்டி இருக்கிறது. காரணம். காணமுடியாத இந்த மன ஆசை மண் மூடிப்போனாலன்றோ உன்னை மறக்க முடியும்.

திரேகத்திற்கு திரேகம் ஒன்றிவிடவில்லையா? மனமும் மனமும் ஒன்றாகிவிடவில்லையா? வாயொடு வாய்வைத்து சுவைத்து முத்து முத்தான முத்தங்களை தந்தாகிவிடவில்லையா? முகத்தோடுமுகப் பொருத்தி, நாவொடுநா சுவைப்பார்த்தாகிவிடவில்லையா? காலொடுகால் பின்னி-கையொடுகை மாட்டி-உடம்போடு உடல் பிணைத்து-அக்கம் பக்கம் நிகழும் நிகழ்ச்சிகளையும் மறந்து-கண் குருடாகி-காது செவிடாகி—வாய் ஊமையாகி—உடல், மானம், வெட்கம், மடம்—நாணம் எல்லாம் அற்றதாகி, அனுபவித்த, ஆனந்தித்த, சந்தோஷப்பட்ட நிலையை நினைத்தால்...........?

உன் அருண ஒலிகண்டு என் செந்தாமரை முகம் மலர்ந்தது. உன் முக அழகும், அக அழகும் என்னை உன்பால் சேர்த்துவிட்டது. உன் அங்கமெல்லாம் தொட்டு, வருடி நான் அடைந்த சந்தோஷம் எவ்வளவு? உன்னையே பார்த்து மகிழ்ந்த என் கண்களை கேட்டுப்பார் அவைகள் சொல்லும், உன்னிடம் எனக்குள்ள அன்பும், ஆசையும் எவ்வளவு என்று. நீ காணாத அல்லது இல்லாத நேரத்தில் இப்படி......அப்படி—எப்படியெல்லாமோ நினைத்து—மானசீக சிருஷ்டி செய்து— பண்ணிப் பண்ணி — சதா — எப்போதும் சர்வக்ஷணமும் உன் நினைவாகவே இருந்து எல்லையற்ற மகிழச்சியடைந்த என்மனதைக் கேள் சொல்லும்; உன்மேல் எவ்வளவு பித்தென்று பிரீதி என்று.

என் மதிமுகத்தோடு உன்முகம் மோதினயே அப்போது நினைவில்லையா உனக்கு இவள் அமர்லால் பீபீ மகள் என்று? செக்கா வானம்போல் சிவக்கும் வரையில் என் கனிந்த கன்னத்தில் வாய், உதடு எல்லாம் புதைய முத்தமிட்டாயே அப்போது தெரியாதா நீசகுலத்தில் பிறந்த துருக்கி சாதிப்பெண் என்று? கண்டவுடன் காதல் கொண்டாய் அப்போது நினைத்தாயா சாதியையும் சமயத்தையும்? ஏங்கிய முகத்தோடு பல்லைக் காட்டி உரையாட வந்தபோது எங்கு போயிற்று உன் சாதியின் ஆணவமும் அகங்காரமும்? உன் தகப்பனார் கண்டபடி எல்லாம் என்னைப் பற்றி எழுதுவாரா? இரண்டு மாதங்களாக கடிதம் எழுதவில்லையே ஏன்? நீ படிப்புமிக்க கற்றவனல்லவா? பி. ஏ. பட்டம் பெற்ற பார்ப்பன குலத்தில் பிறந்தவன் அல்லவா? நீ என் மதி இழந்தாய் என் மதி முகத்தைக்கண்டு? அறிவு அற்றவன் ஆனாயே என் அகத்தைக் கண்டு பட்டம் பெற்ற நீ என் பதர் ஆனாய், என் சொட்டும் முகத்தைக்கண்டு? உன் குலத்தையும், சாதியையும், சாதி ஆசாரத்தையும் நிலைநாட்ட வேண்டியா வருடக் கணக்கில் படித்து பட்டம் பெற்றது? உன் சாதியை உயர்த்தி பிற சாதியைத் தாழ்த்தவா படித்தாய் பள்ளியில்? சாதி சாக்கடையில் மூழ்கவா கல்வி கற்றாய் கல்லூரியில்?

உன் சாதி அல்லாதவளை ஏன் விரும்பினாய்? ஏன் தொட்டாய்? ஏன் தொட்டு தீண்டினாய்? என்னைக் கெடுத்தவன் நீ! கெட்டவள் நான்? உன்னால் தீண்டப்பட்டவள் நான்! என்னைத் தீண்டியவன் நீ. மானம் பறிகொடுத்தவள் நான். மானம் போக்கியவன் நீ. என் சன்மம் என்ன ஆவது? உலகம் என்னை மானம் அற்றவள் என்று நிந்திக்கும்; பழிக்கும்; பறைசாற்றும்; மதியிழந்து, மானம் இழந்து, நிலை இழந்து, பேர் இழந்து, பெருமை இழந்து பெற்ற தாய் தந்தையரை இழந்து தவிக்க வேண்டியவள் நான்! உனக்கு உண்டா இந்த நிந்தனை இந்தப் பரந்த உலகில்? மதி கெட்டவன், மானம் கெட்டவன் என்று சொல்லுமா இந்தப் பஞ்சை உலகம்? நீ தீண்டத்தகாதவன் என்று நிந்தித்துத் தள்ளுமா இந்த உலகம்? உன் மனச்சாட்சிதான் உன்னை என்பால் சேர்த்து வைக்கவேண்டும். உன்னை நான் இன்னும் என்ன வகையில் பெறமுடியும் இவ்வழிகளைவிட? கடைசியாக ஒரு வார்த்தை. இன்னமும் நம்புகிறேன். நீ தான் எனக்கு சாமி, இரு தாய் தகப்பனும். நீ தான் என் வாழ்வு. நீ தான் என் அன்பும் ஆசையும். அலக்ஷியம் செய்து என் ஆவியைப் போக்காதே. நீ கொடுத்த உறுதி மொழிகளையும் சத்திய வார்த்தைகளையும் ஞாபகப்படுத்தி கடமையைச் செய். கடமை தவறினால் இந்த அபலை உயிருடன் இருந்து உலக அவமதிப்பின்றியே தன் வாழ்வு நாளை முடித்துக் கொள்வாள் என்பதையும் நீ அறிவாய்! இதையே மறுபடியும் உனக்கு நினைப்பூட்டுகிறேன்."

★ ★ ★

படித்து முடித்தார், கண்களிலிருந்து கண்ணீர் கட்டுக்கடங்காமல் பெருகின. எவ்வளவு நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தார் என்பது அவருக்கேத் தெரியாது. உண்மை தான். "சாதி, சமயம் நம் இனத்தால் பிரித்து வைக்கப்பட்டது உண்மைதான். கலங்கமற்ற காதலைக் கட்டுப்படுத்தியதும் நம்மவர் தான். சாதியை வளர்த்து, சண்டையைக் கிளப்பி, சமரசத்தை ஒழித்து, சந்தோஷத்தைப் பாழக்கி, சக்தியை அழித்து, சம்பிரதாயத்தை ஏற்படுத்தியது பிராமணர் இல்லாமல் பின் யார்?" என்று அவர் வாய் முணுமுணுத்தது.


## பகுத்தறிவுக் கதைகள்

சுயமரியாதைக் கொள்கையிலே மலர்ந்த சிறுகதை மலர்கள்! சிந்தனையைத் தூண்டும் உணர்வுச் சித்திரங்கள், மடமை இருளகற்றும் சுடர்மணிகள்!

ஆக்கியோன்

**ப. கண்ணன்**

புத்தகமாக அச்சாகிக்கொண்டிருக்கிறது.

விவரங்கள்:

பகுத்தறிவு பதிப்பகம்,
வைத்திச் செட்டித் தெரு,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.


---

மதுரை முனுசிபல் கவுன்சிலர் தோழர் சண்முகம் அவர்களின் புதல்வி தோழியர் முத்துலக்ஷிமிக்கும் தோழர் கே. பி. பாக்கியத்துக்கும் 1-11-46 வெள்ளிக்கிழமையன்று வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. மணமகனுக்குத் தெரியாது மணப்பந்தலில் புரோகிதப் பார்ப்பனன் சடங்குகள் செய்து கொண்டிருந்தது. அது மணமகனுக்குத் தெரிய வந்ததும், புரோகிதன் பந்தலைவிட்டு வெளியேறினால் தான் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொள்ள முடியும் என மணமகன் கண்டிப்பாய் கூறிவிட்டார். வந்த புரோகிதன் தனது மூட்டையைக் கட்டிக்கொண்டு போன பின்புதான் வாழ்க்கை ஒப்பந்தம் சுயமரியாதை முறைப்படி நடந்தேறியது.


வெள்ளை, வெட்டை முதலிய உஷ்ண வியாதிகளுக்கு
எங்கும் பிரசித்தி பெற்ற

## இராஜாளி எண்ணெய்

எந்த மருந்தினாலும் தீராத நாள்பட்ட வெள்ளை, வெட்டை, மஞ்சள், ரத்தம், வெள்ளை, நீரடைப்பு, நீர் கடுப்பு, நீர் எரிச்சல், நீர் எரிவு, நீரிழிவு, ஆண்குறி சம்புவலி, வீக்கம், சொறி, சிரங்கு, ஊரல், படை, கிரந்தி, புண், கைகால் பிடிப்பு, தந்திகுலை, நாபிரணம், செற்பரணம், முதலிய மிக கொடிய மேக வியாதிகளை மறுமுறை வாராதபடி வேரற நீக்கக் கூடிய மருந்து. இதற்கு இணை வேறு இல்லை. குறைந்த விலை நிறைந்த குணம்..

பூர்ண குணாந்திற்கு உத்திரவாதமுள்ளது புட்டி 1-க்கு ரூ. 2—0—0

தயாரிப்பவர்: சித்தவைத்திய பண்டிட் S. V. இராஜரத்தினக் கவுண்டர், R. I. M. (P)

சேர்மன் நம்மன்ன செட்டி ரோட், அரிசிப்பாளையம், சேலம், S. I.

# அர்ச்சுனன் நினைவு நாள்

மறைந்த மன்னன் **அர்ச்சுனன்** அவர்களைக் குறித்து தமிழ் நாடெங்கும் நூற்றுக் கணக்கான கழகங்களிலிருந்து அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது. 27—10—46ல் நாடெங்கும் நினைவு நாள் கொண்டாடப்பட்டது. அன்று மறைந்த தளபதியின் அரும்பணிகளையும் நற்குணங்களையும் அவரது உறுதியையும் விளக்கிப் பேசப்பட்டது.

பழயகோட்டையில் அன்றைய தினம் பல ஏழைகளுக்கு உணவளிக்கப்பட்டது. தோழர் N. E. பாலகுருவால் வெளியிடப் பட்ட நினைவு மலர் ஒன்று அன்று வந்திருந்தோருக்கு வழங்கப்பட்டது.

தோழர் அர்ச்சுனன் அவர்கள் காட்டிய அன்பும் பரிவும் என்றும் மக்கள் மனதை விட்டகலாது என்பதை தமிழ்நாடு நிலை நிறுத்தும் என்றே கருதுகின்றோம் பழய கோட்டை உண்மையிலே தமிழகததின் விடுதலைக் கோட்டையாக் தமிழகத்தின் பழயகோட்டையாக திகழும் என்ற நம்பிக்கை நமக்குண்டு. அவ்வளவு உணர்ச்சியை ஊட்டிச் சென்றிருக்கிறார் நமது மறைந்த மன்னர்.

திருப்பூரில் 20—10—46ல் சேலம் தோழர் செகநிசன் அவர்கள் தலைமையில்,

21—10—46ல் திருச்சி தென்னூர் திராவிடர் கழகத்தில்,

15—10—46ல் வடசேரி கலைபயில் கழகத்தில் தோழர் V. S. அருணசலம் அவர்கள் தலைமையில்,

23—10—46ல் அனந்தபுரத்தில் தோழர் R. மணிவண்ணன் தலைமையில்,

முக்கனூர்பட்டி கொங்குவேளாள கழகத்தில் 24—10—46ல் தோழர் அண்ணு தலைமையில்,

சென்னை மயிலாப்பூர் திருமயிலை திராவிடக் கழகத்தின் ஆதரவில் 27-10-46ல் தோழர் M. K. தங்கவேலர் தலைமையில்,

தஞ்சையில், கே. ஆர். இராமசாமியின் கிருஷ்ணன் நாடக சபை நாடகத் தொழிலாளர் கழகத்தில் 27—10—46ல் தோழர் டி. வி. நாராயணசாமி தலைமையில்,

கரந்தை திராவிட வாலிபர் கழகத்தின் சார்பில் "செல்வம் மைதானத்" தில் தோழர் தோ. சி. பெரியசாமிப் புலவர் தலைமையில்,

மறைந்த தளபதி அர்ச்சுனன் அவர்களுக்கு இரங்கற் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* * *

திருச்சி தென்னூர் தோழர் என். நரசிம்மன் அவர்களால் இரங்கற்பா வொன்றும்,

கொழும்பு பம்பலப்பட்டி தோழர் நா. ஆ. அ. கடவுள் என்பவரால் இரங்கற்பா வொன்றும்,

திண்டுக்கல் பொது நல ஊழியன் தோழர் எல். வீராசனுல், "விந்தியம் வீழ்ந்தது மாண்பு மிகு அர்ச்சுனன் மறைவு" என்ற இரங்கற் கட்டுரையும் இன்னும் பல இரங்கற் கடிதங்களும் வந்தன.

---

சிந்தனைக்கு :—

## யார் திருடன்?

ஒருவன் வைத்திருக்கும் பொருளை அவன் அறியாமல் எடுத்துக்கொள்ளும் ஒருவனை திருடன் என்று சொல்லுகிறோம்.

பொருள் எவ்வாறு ஒருவனுக்கு வந்தது? அவனது உழைப்பின் பலனாக கிடைத்தது. அதாவது அவனது உடலுழைப்புக்கு கிடைத்த ஊதியம்; தான் செலவழித்தது போக மீத்துவைத்த ஊதியம். அது கண்ணுக்குப்புலப்படக் கூடியது.

ஆனால், ஆயிரக்கணக்கானவர்களின் உழைப்பை அதனால் கிடைக்கும் பலனை பட்டப்பகலிலே, உழைப்பவனுக்குத் தெரியாமல் திருடுகிறவனுக்கு என்ன பெயர்? இது யாருக்குத் தெரியும்? உழைக்கிறவனின் உழைப்பின் பலன் பொருள் வடிவில் இல்லாததால், தனது பொருள் திருடப்படுகிறது என்று கண்ணுக்குத் தெரியாமல் இருக்கலாம், ஆனால் உண்மையில் திருட்டு நடக்கிறதா இல்லையா? ஆக, இப்பொழுது பக்காத் திருடன் யார்? இது கிரிமினல் குற்றமா அல்லவா? தீர்ப்பு நீங்களே கூறுங்கள்.

---

2-ம் பக்கம் தொடர்ச்சி

தற்போதுள்ள பாடப்புத்தக தேர்ச்சிக் குழுவினர் (Text Book Committee) தேர்ந்தெடுக்கும் தமிழ்ப் பாடப்புத்தகங்களில் பற்பல குறைகள் வெளிப்படையாகக் காணக்கிடக்கின்றன. இக்குறைபாடுகளை உடனடியாக நீக்கத் தமிழில் வித்துவான் பட்டம் பெற்றவர்களையே தமிழ் நூல்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் அமைக்கவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் புத்தகங்களில் தமிழ் நாட்டு மன்னர்களின் ஆட்சித்திறன், போர் முறை, கொடைத்தன்மை, செந்தமிழ் வளர்ந்த சிரிய பண்பு முதலியவற்றையும், புலவரின் பரந்த குறிக்கோளையும், வள்ளல்களின் வள்ளண்மையையும், தமிழரின் நாகரிகத்தையும் அடிப்படையாகக்கொண்ட பாடங்களும் அமையுமாறு பாடப் புத்தகக் குழுவினர் ஏற்பாடு செய்யவேண்டும்.

சென்னை திருச்சி ஆகிய இரண்டு அனைத்திந்தியவானொலி நிலயங்களில் தமிழ் இலக்கியச் சுவையைப் பொதுமக்கள் பெரிதும் பெற இப்போது வாரத்திற்கு நான்கு நிமிடங்கள் இருப்பதைவிட அதிகமான நேரத்தைப் பயன்படுத்த உத்திரவிடும்படி P. W. டிபார்மெண்ட் காரியதரிசி (Secretary to the Government of Madras, P. W. Department) அவர்களை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.


முந்துங்கள்! முந்துங்கள்!!

**இன்றே ஆர்டர்களுக்கு முந்துங்கள்!!!**

எங்கும் புகழ்பெற்ற **N. K. P. வேல்** அவர்களால் டைரக்ஷன் செய்யப்பட்ட சாயத்தொழில் நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டு மேல் நாட்டின் தயாரிப்பைக் சாட்டிலும் உயர்ந்தவை என்ற உத்திர வாதத்துடன் அனுப்பப்படுவது?

சாயத் தொழிலுக்கு முதன்மை பெற்றது.

செல்வம் டர்க்கிரெட் ஆயில்கள் அண்டு நெப்தால் சோப்

ஒரே மணி நேரத்தில் நூல் நனைந்து நன்றாய் ஊறிவிடும். அப்பொழுதே சாய்ங்கள் **தீர்க்கலாம்.** சாயம் தீர்க்கப்பெற்ற நூல் மிருதுவாகவும், பாலீஷாகவும் இருக்கும்.

இண்டாந்திரியன் முதல் நெப்தால் வரை உபயோகப் படுத்தலாம்.
எவ்விதபரீக்ஷைக்கும் உத்திரவாதமுள்ளது.
விலை விபரங்களுக்கு எழுதவும்.

**ஏஜண்டுகள் தேவை!!!**

விலாசம்:—
**செல்வம் டர்க்கிரெட் ஆயில் ஸ்டோர்,**
திருச்செங்கோடு, P. O., சேலம் ஜில்லா,

உரிமையாளர்:— வேல்.

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

## சிந்தித்துப்பார்

பூராவும் வேலை செய்து வந்தனர். ஆனால் கடந்த இரண்டு யாண்டுகளாக நமது மாகாணத்திலிருந்து பிற மாகாணங்களுக்கு நூல் ஏற்றுமதி யாவதால் நம் மாகாணத்திற்கு 19,000 பேல் நூல் தான் இருக்கின்றன. இப்போது நாட்டிலே உள்ள கைத்தறிகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. தற்சமயம் 5 லக்ஷம் கைத்தறிகள் உண்டென்பர். இவைகள் எப்போதும் வேலை செய்ய, அதாவது சண்டைக்கு முன்பு வேலைசெய்வது போல செய்ய வேண்டின் 47,500 பேல் நூல் வேண்டும். அதனால் இன்னும் 12.000 பேல் அதிகமாக்க வேண்டும். அதற்கு மில் (பஞ்சாலைகள்) பல ஏற்படுத்த வேண்டும் அதற்குமாறாகக் கதர் திட்டத்தால் அவ்வளவு நூல் நூற்று உதவ வேண்டும். இப்போது கதர் நூல் மொத்தத்தில் 200 பேல்கூட இல்லை என்று உண்மை காணும் கழகத் (Fact Finding Committee)தார் கூறுகின்றனர். இங்ஙனமாயின் இனி எங்ஙனம் 5 லக்ஷம்பேல் நூற்றுக் கொடுக்கப் போகின்றது? ஆகவே தொழிற்சாலைகள் மூடப்படுதலால் ஆலைத் தொழிலாளர்க்கும் வேலையின்மை. கைத்தறி நெசவாளர்க்கும் வேலையின்மை.

இவர்கள் யாவரும் ராட்டைச் சுற்றி ஜீவிக்கலாம் என்று கூறுவார் மந்திரியார். ஆனால் உண்மையிலே போதிய வருமானம் வருமா என்பது. சிந்தித்துத் தெளிய வேண்டியவொன்று. காலையிலிருந்து மாலைவரைக்கும் கை, கால், கண் முதலியன வலிக்க இடைவிடாமல் நூற்றாலும் ஒரு குஞ்சம் நூல் ஆகாது; யாண்டிற்குத் திறமை வாய்ந்த கதர் நூற்கின்றவர்களால்கூட (சிறையிலே) ரூ. 500க்கு மேல் சம்பாதிக்க முடியவில்லை என்பர், ஆனால் ஆலைகளிலே உடற்குத் துன்பமின்றி ஒரு சில மணிநேரம் நாள் ஒன்றுக்கு வேலைசெய்து மாதத்திலே ரூ. 500க்குமேல் சம்பாதிக்க முடிகின்றது.

இன்னும் ஆலைத்துணிகள் மக்கள் மனோ நிலைக்கேற்ப பல வகையிலே கிடைக்கும். மெல்லிய ஆடை; அதற்கேற்ப சொற்பவிலை. ஆனால் கதர் சம்பளிபோல்; உயர்ந்த விலை. ஆலையிலே செய்யப்பட்ட 20 கெ. துணி ஒரு கெஜம் 0–5–6 ஆனால், கதர் துணி ரூ. 1–2–0 ஆகின்றது என்று சர் விக்டர் சாசான் கூறுவர். ஆனால் துணிப் பகுதியைச் சார்ந்த (Textile Depot)வர்கள் ஒரு கெஜம் ரூ. 1—7—10 ஆகின்றது என்பர். மலைக்கும் மடுவுக்கும் போலிருக்கின்றதில்லையா? நாட்டின் பொருளாதார நிலையைக் குறைக்கப்போய் நூல் நூற்கும் ஒவ்வொருவனும் அவனுடைய ஆடைக்கு வேண்டியளவுகூட நூல் நூற்க முடியாது போலிருக்கின்றது. அங்ஙனம் நூற்றாலும் குறைந்த வருமானத்திலே ரூ. 1—7—10 கொடுத்து துணி வாங்க முடியாது. ஆகவே துணிப்பஞ்சம் மட்டுமல்ல; வருவாயும் குறைவு. அது காரணமாகப்பட்டினி!

நாட்டிலே வாணிபம் இல்லாமல் நாடு முன்னேற்றமடைய முடியாது. அதிலும் இந்த அணுக்குண்டு காலத்திலே நாமும் பிற நாட்டினரைப்போல் முன்னேற்றமடைய வேண்டும். அதற்கு வாணிபம் பெருக்கத் தொழிற்சாலைகள் ஏற்படுத்த வேண்டும். வாணிபத்தைப் பெருக்க மனம் இல்லையென்றாலும் நமது நாட்டிலே உற்பத்தியாகும் அதிக ஆடைகளைக் கொடுத்து நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை ஜாவா, சைனா முதலிய பிற நாடுகளிலிருந்து பெறலாம். உணவுப் பஞ்சத்தையும் போக்க முடிகின்றது. எனவே ஆலைகளைப் பெருக்குவதால் நாட்டின் செல்வமட்டும் உயரவில்லை; உடைப்பஞ்சம் நீங்குகின்றது; மிக்க வருமானம் கிடைக்கின்றது; உணவுப் பொருள்களைப் பிறநாட்டிலிருந்து பெறவும் முடிகின்றது ஆகவே, தமிழர்களே! புண்ணியாத்மாவாகக் கருதப்படும் காந்தியாரின் அருளால் பிறந்தது இத்திட்டம் என்பதற்காக இத்திட்டத்தைக் குரங்கு பிடியாகப் பிடித்துக்கொண்டிராமல் நன்மை தீமைகளை நன்றாகச் சிந்தித்துகொள்ளத் தகுமாயின் கொண்டு விடவேண்டுமாயின் கைவிடல் வேண்டும். இன்னும் இத்திட்டம் தேசியம் ஆளும் பிற மாகாணங்களிலும், காந்தியார் பிறந்த பம்பாய் மாகாணத்திலுங்கூட இல்லை ஆனால் சென்னை மாகாணத்திலே கொண்டுவரப்பட்டது. காந்தியாரின் சூழ்ச்சியினாலா?

நமது மாகாணத்தைக் கொள்ளையடிக்கும் இடமாக வைப்பதற்காகவா? நாம் கதர் திட்டம்கொண்டு ராட்டைச் சுற்றுவோமாயின் ஆண்டுக்கு ஒரு ஆளுக்கு ·09 கெஜம்கூட கிடைக்காது போலிருக்கின்றது. இந்த நிலையிலே ஆடைக்குப் பிற மாகாணங்களைக் கையேந்தி நிற்க வேண்டிவரும் இல்லாதுபோயினும் துணிப்பஞ்சம் மிகுதியாக எடுக்குமாயின் தானாகவே பிற மாமாணத்தினின்று ஆலைத் துணிகள் வந்து சொற்பவிலைக்கு விற்கப்படுமாயின் கதர் திட்டம் என்னவாகும்? சிந்தித்துப் பாருங்கள்!

———

* * *

20-10-46 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-மணிக்கு உரிகம் W. T. பிளாக் பழந்தமிழ் இளைஞர் செடியூல்ட் கழக சார்பில் பழங்குடி பாதுகாவலர் திரு. M. முனுசாமி இன்சினியர் அவர்கள் தலைமையில் பண்டைய காலந்தொட்டு இந்நாள்வரை நம் சமூக அடிமை வாழ்வின் சின்னமாக அமைந்திருந்த மேளம் என்னும் அரக்கனுக்கு தீ வைக்கப்பட்டது. அத் தீயானது 20 அடி உயர எரிய; தங்கவயலில் அந்நாள் தமிழர்களின் நன்னாளாக திகழ்ந்தது குறிப்பிடதக்கது. தமிழர்கள் மேளத்தை கொளுத்தியதின் காரணத்தை விளக்கி திருவாளர்கள் V. N. சரவணம் முத்துகுமார் (மலேரியா இன்ஸ்பெக்டர், J. C. ஆதிமூலம், சென்னை V. P. S. மணியர், M. அரங்கசாமி B. A. சசிலா தேவி முதலியோர்கள் பேசினார்கள். நன்றி கூறலுடன் கூட்டம் இரவு 9½ மணிக்கு முடிந்தது.

# கருஞ்சட்ட கப்பற்படை

(கல்லூரி மாணவன், சு. கந்தன்)

அரசியல் என்ற ஆழியிலே பெரியார் தலைமையிலே கருஞ்சட்டை அணிந்த களங்கமில்லா கப்பற் படையினர் கருங்கொடியை வானளாவப் பறக்கவிட்டுச் செல்கின்றனர். அக்கப்பல் இன்ப திராவிடம் என்னும் இனிய துறை முகத்தை நோக்கிச் செல்கிறது. பட்டம் பதவிக்கு ஆசைப்படும் பதர்கள் போன்ற சுறாமீன்கள் அதைப் பார்த்து பயமுறுத்துகின்றன. ஆரியம் என்னும் திமிங்கலம் ஆவென்று வாயைத்திறந்து சிதைக்கப் பார்க்கிறது. கருஞ்சட்டை வீரர்கள் வில்லெடுத்து அவைகளை வீரிட்டு ஓடச் செய்கின்றனர். ஆங்கிலம் என்னும் பாறை ஆழியின் நடுவே கிடக்கிறது. ஆராய்ச்சி மிக்க ஆட்கள்—கப்பல் செலுத்துவதில் கைதேர்ந்த தமிழர் அப்பாறையில் மோதி அவதிப்படாமல் அகற்றி கலத்தை கடத்திச் செல்லுகின்றனர்.

# வைதீக வஞ்சகர்களுக்கு

(அனுமந்தன்பட்டி பே. நல்லசாமி)

சட்டம் மட்டம் தட்டப்பட வேண்டும் என்றவுடன் மனம் பதை பதைக்கிறார்கள் மதக் குருக்கள்களும், வஞ்சகர்களுமான வைதிகர்களும். இவர்கள் இருக்கும் சட்டத்தையும் அமுலுக்கு கொண்டுவர விடுவதில்லை. அதற்கு இதோ ஓர் எடுத்துக்காட்டு :—

பாராசரஸ்மிருதி பிராயச்சித்த காண்டம் 28வது சுலோகத்தில்,

“நஷ்டேம்ருதெப்ரவாஜி தெக்லீபெ
சபதிதே பதன
பஞ்சஸ்வாபத்ஸ நாரீஸாம் பதிரந்
யோவிதியதே:

(பொருள்)

ஓடிப்போய்விடுதல், மரணமடைதல், துறவியாதல், பேடியாயிருத்தல் (அலி). கொடிய நோயுடையோனாயிருத்தல், மனமொத்து வாழ முடியாமை ஆகிய இவற்றுள் ஒன்றினை கணவன் அடைந்தால், பெண் மற்றொருவனை மணக்கலாம்.

குறிப்பு:—இது ஆடூர்—ஈச்சம்பாடி வித்வான் உ. வே. தேசிகாச்சாரியாரால் 1902ம் வருடம் அச்சிடப்பட்ட கிரந்தத்திலுள்ளது.

எடுத்ததற்கெல்லாம் சாத்திரத்தையும் சம்பிரதாயத்தையும் காட்டும் சண்டாளர்கள் இந்தச் சாத்திரக் குப்பையிலேயே இருந்து கிண்டி எடுத்த குண்டுமுத்தை ஏன் குழி தோண்டிப் புதைக்கப் பார்க்கின்றனர் எனக் கேட்கிறேன்.

Printed by M. Vedapuri Mudaliar at Sri Lakshmi Press 207, Bazar St., Tiruvettipuram. Edited, and Published by M. Kandaswamy, at 203, Bazar St., Tiruvettipuram. (N. A.)